**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No.105/2012**
திரு.மேரி வர்கீஸ் (P.W. –1) **05.08.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. நான் நீதிமன்றத்தில் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று எனக்கு தெரியுமா என்றால் என்னுடைய சொத்தில் பாகம் கோரியுள்ளேன். இரண்டாம் பிரதிவாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் என்னுடைய உடன் பிறந்த சகோதரி ஆவார். அவர் எனக்கு மூன்றாவது சகோதரி ஆவார். எனக்கு தாவா சொத்தில் உரிமை உள்ளது போல் இரண்டாம் பிரதிவாதி பிரேமாவுக்கும் சொத்தில் உரிமை உள்ளது என்றால் சரிதான்.

**3,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என்னுடைய பெயர் மேரி ஆகும். என்னுடைய பெயர் மேரி வர்கீஸ் என்று சொன்னால் தவறு என்றால் சரியல்ல. என்னை வீட்டில் எனக்கு வேறு ஏதேனும் பெயர் உள்ளதா என்றால் என்னை வீட்டில் கொச்சி மேரி என்று கூறுவார்கள். எனக்கு மேரி கிறிஸ்டியன் என்ற மற்றொரு பெயர் உள்ளதா என்றால் இல்லை. என்னுடைய தகப்பனார் பெயர் வர்கீஸ் ஆகும். வரித் என்றும் சொல்லுவார்கள். நாங்கள் கேரளாவை பூர்வீகமாக கொண்டவர்கள் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் வர்கீஸ் அவர்களும் என்னுடைய தாயார் குஞ்சானி அவர்களும் கேரளாவில் ஆரம்பத்தில் வசித்து வந்தனர் என்றால் சரிதான்.

2. என்னுடைய தாயார் பின்னர் திருப்பூருக்கு வந்து விட்டார் என்றால் என்னுடைய தாயார் வரவில்லை என்னுடைய தகப்பனார் தான் வேலைக்காக திருப்பூர் வந்து விட்டார். கேரளாவில் வர்கீஸ் என்ற பெயரை வரித் என்று கூறுவார்கள் என்றால் சரிதான். நான் எந்த ஊரில் உள்ள சொத்துக்கு பாகம் கோரியுள்ளேன் என்றால் திருப்பூரில் உள்ள சொத்துக்கு தான் பாகம் கூறியுள்ளேன். தாவா சொத்துக்கள் எங்கு உள்ளன என்றால் அங்கேரிபாளையம் வீடும், காந்தி நகரில் காலி இடமும் இருந்தது. காந்தி நகரில் உள்ள இடத்தில் நான் சிறிய சிறிய வீடுகள் கட்டி இருந்தேன். கேரளாவில் உள்ள சொத்துக்களை பொறுத்து கோரவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதையும் சேர்த்து கேட்டுள்ளேன்.

சமரசமாக பேசுவதற்கு கோரியமையால் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

UMA MAHESHWARI

Digitally signed by UMA MAHESHWARI
Date: 2026.08.06 10:46:35 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.